**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

सत्यमेव जयते

# 1962 ஆம் ஆண்டு கல்லெண்ணெய் மற்றும் கனிமங்கள் குழாய்த்தொடர் (நிலத்தைப் பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுதல்) சட்டம்

**(எண் 50/1962)**

**(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)**

# The Petroleum and Minerals Pipelines (Acquisition of Right of User in Land) Act, 1962

**(No. 50 of 1962)**

**(As on 31st October, 2023)**


தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# கல்லெண்ணெய் மற்றும் கனிமங்கள் குழாய்த்தொடர் (நிலத்தைப் பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுதல்) சட்டம்

(எண் 50/1962)

# The Petroleum and Minerals Pipelines (Acquisition of Right of User in Land) Act, 1962

(No. 50 of 1962)

# PREFACE

This edition of the Petroleum and Minerals Pipelines (Acquisition of Right of User in Land) Act, 1962 (No. 50 of 1962) as on 31st October, 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 13th March, 2021 on Pages from 1 to 18.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
13th March, 2021. *Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள 1962 ஆம் ஆண்டு கல்லெண்ணெய் மற்றும் கனிமங்கள் குழாய்த்தொடர் (நிலத்தைப் பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுதல்) சட்டம் (எண் 50/1962) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2021, மார்ச் 13 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 1 முதல் 18 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது .

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)……

13, மார்ச் 2021. இந்திய அரசு செயலாளர்.

**THE PETROLEUM AND MINERALS PIPELINES (ACQUISITION OF RIGHT OF USER IN LAND) ACT, 1962 (No. 50 of 1962)**

## CONTENTS


| Sections | | Pages |
|---|---|---|
| 1. | Short title, extent and application. | 1 |
| 2. | Definitions. | 2 |
| 3. | Publication of notification for acquisition. | 3 |
| 4. | Power to enter, survey, etc. | 3 |
| 5. | Hearing of Objections. | 4 |
| 6. | Declaration of acquisition of right of user. | 5 |
| 7. | Central Government or State Government or corporation to lay pipelines. | 6 |
| 8. | Power to enter land for inspection, etc. | 8 |
| 9. | Restrictions regarding the use of land. | 8 |
| 10. | Compensation. | 10 |
| 11. | Deposit and payment of compensation. | 11 |
| 12. | Competent authority to have certain powers of civil courts. | 12 |
| 13. | Protection of action taken in good faith. | 12 |

# 1962 ஆம் ஆண்டு கல்லெண்ணெய் மற்றும் கனிமங்கள் குழாய்த்தொடர் (நிலத்தைப் பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுதல்) சட்டம் (எண் 50/1962)

## பொருளடக்கம்


| பிரிவுகள் | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப் அளாவுகை மற்றும் பொருந்துகை. | 1 |
| 2. | பொருள் வரையறைகள். | 2 |
| 3. | உரிமையை கையகப்படுத்து வதற்கான அறிவிக்கையை வெளியிடுதல். | 3 |
| 4. | நுழைதல், அளவாய்வு செய்தல் முதலானவற்றிற்கான அதிகாரம். | 3 |
| 5. | மறுப்புரைகளைக் கேட்டல். | 4 |
| 6. | பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுவதற்கு விளம்புகை செய்தல். | 5 |
| 7. | மைய அரசோ அல்லது மாநில அரசோ அல்லது கூட்டுருமமோ குழாய்த் தொடர்களைப்பதித்தல். | 6 |
| 8. | ஆய்வுசெய்தல் முதலானவற்றிற்காக நிலத்தினுள் நுழைவதற்கான அதிகாரம். | 8 |
| 9. | நிலத்தைப் பயன்படுத்துவது பொறுத்த கட்டுப்பாடுகள். | 8 |
| 10. | சரியீடு. | 10 |
| 11. | சரியீட்டை வைப்பீடு செய்தலும் வழங்குதலும். | 11 |
| 12. | தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, உரிமையியல் நீதிமன்றங்களின் குறித்தசில அதிகாரங்களைக் கொண்டிருத்தல். | 12 |
| 13. | நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. | 12 |

| | | |
|---|---|---|
| 14. | Bar of jurisdiction of civil courts. | 13 |
| 15. | Penalty. | 13 |
| 16. | Certain offences to be cognizable. | 14 |
| 16A. | Burden of proof in certain cases. | 15 |
| 16B. | Presumption regarding property. | 15 |
| 16C. | Provisions as to bail. | 15 |
| 16D. | Section 438 of the Code of Criminal Procedure, 1973 not to apply. | 16 |
| 17. | Power to make rules. | 16 |
| 18. | Application of other laws not barred. | 17 |

| | | |
|---|---|---|
| 14. | உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிற்குத் தடை. | 13 |
| 15. | தண்டம். | 13 |
| 16. | குறித்தசில குற்றச்செயல், பிடியாணையின்றி கைது செய்வதற் குரியதாக இருத்தல். | 14 |
| 16(அ). | குறித்தசில நேர்வுகளில் மெய்ப்பிக்கும் சுமை. | 15 |
| 16(ஆ). | சொத்து குறித்த அனுமானம். | 15 |
| 16(இ). | பிணையம் பற்றிய வகையங்கள். | 15 |
| 16(ஈ). | 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 438 ஆம் பிரிவு பொருந்தாது | 16 |
| 17. | விதிகளை செய்வதற்கான அதிகாரம். | 16 |
| 18. | பிற சட்டங்களின் பொருந்துகை தடைசெய்யப் படவில்லை. | 17 |

# THE PETROLEUM AND MINERALS PIPELINES (ACQUISITION OF RIGHT OF USER IN LAND) ACT, 1962

**(No. 50 of 1962)**

[7th *December,* 1962.]

An Act to provide for the acquisition of right of user in land [1][for laying pipelines for the transport of petroleum and minerals] and for matters connected therewith.

BE it enacted by Parliament in the Thirteenth Year of the Republic of India as follows:—

Short title, extent and application.

1. (1) This Act may be called the [2][Petroleum and Minerals Pipelines] (Acquisition of Right of User in Land) Act, 1962.

(2) It extends to the whole of India except the State of Jammu and Kashmir*.

(3) It applies in the first instance to the whole of the States of West Bengal, Bihar, Uttar-Pradesh and Gujarat and the Union territory of Delhi, and the Central Government may, by notification in the Official Gazette, declare that this Act shall also apply to such other State of union territory and with effect from such date as may be specified in that notification and thereupon the provisions of this Act shall apply to that State or Union territory accordingly.

---

1.Subs. by Act 13 of 1977, s. 2, for "for laying petroleum pipelines" ( w.e.f. 3-2-1977).

2. Subs. by s. 3, ibid. for "Petroleum Pipelines" ( w.e.f. 3-2-1977).

*. Vide notification No. S.O. 3912(E), dated 30th October, 2019, this Act is made applicable to the Union territory of Jammu and Kashmir and the Union territory of Ladakh.

# 1962 ஆம் ஆண்டு கல்லெண்ணெய் மற்றும் கனிமங்கள் குழாய்த்தொடர் (நிலத்தைப் பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுதல்) சட்டம்

**( எண் 50/1962)**

[1962, டிசம்பர் 7]

[1][கல்லெண்ணெய் மற்றும் கனிமங்கள் ஆகியவற்றைக் கொண்டு செல்வதற்கான குழாய்த்தொடர் பதிப்பதற்காக] நிலத்தைப் பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுவதற்காகவும் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகளுக்காகவும் வகைசெய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் பதின்மூன்றாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் பொருந்துகை.

**1. (1)** இந்தச் சட்டம், 1962 ஆம் ஆண்டு [2][கல்லெண்ணெய் மற்றும் கனிமங்கள் குழாய்த்தொடர்] (நிலத்தைப் பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுதல்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

**(2)** இது, [*]ஜம்மு காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

**(3)** இது முதற்கண், மேற்கு வங்காளம், பீகார், உத்தரப்பிரதேசம் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் மற்றும் தில்லி ஒன்றியத்து ஆட்சிநிலவரை முழுவதற்கும் பொருந்துகிறது மற்றும் மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டம், அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் அத்தகைய பிற மாநிலத்திற்கும் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்கும் கூட மற்றும் அத்தகைய தேதியிலிருந்து செல்திறம் பெறுமாறு பொருந்தும் என்று விளம்புகை செய்யலாம் மற்றும் அதன்பேரில் இந்தச் சட்டத்தின் வகையங்கள் அதன்படி அந்த மாநிலத்திற்கு அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்கும் பொருந்துவனவாகும்.

---

1. சட்ட எண் 13/1977 இன் 2 ஆம் பிரிவினால் "கல்லெண்ணெய் குழாய்த் தொடர் பதிப்பதற்காக" என்பதற்கு மாற்றாக (03–02–1977 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.
2. மேற்படிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் "கல்லெண்ணெய் குழாய்த்தொடர்" என்பதற்கு, மாற்றாக (03–02–1977 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

* 2019 அக்டோபர் 30 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண் எஸ்.ஓ 3912 (E) இன் வாயிலாக இந்தச் சட்டம் ஜம்மு மற்றும் காஷ்மீர் ஒன்றித்து ஆட்சிநிலவரைக்கும் மற்றும் லடாக் ஒன்றியத்து ஆட்சி நிலை வரைக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டது.

Definitions. 2. In this Act, unless the context otherwise requires,—

(a) "competent authority" means any person or authority authorised by the Central Government, by notification in the Official Gazette, to perform the functions of the competent authority under this Act [1][and different persons or authorities may be authorised to perform all or any of the functions of the competent authority under this Act in the same area or different areas specified in the notification;]

(b) "corporation" means any body corporate established under any Central, Provincial or State Act, and includes—

(i) company formed and registered under the Companies Act, 1956 ; and 1/1956.

(ii) a company formed and registered under any law relating to companies formerly in force in any part of India;

[1][(ba) "minerals" have the meanings assigned to them in the Mines Act, 1952 , and include mineral oils and stowing sand but do not include petroleum;] 35/1952.

(c) "petroleum" has the same meaning as in the Petroleum Act, 1934 , and includes natural gas and refinery gas; 30/1934.

(d) "prescribed means prescribed by rules made under this Act.

1. Ins. by Act 13 of 1977, s. 4 (w.e.f. 3-2-1977).

**2.** இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள் வரையறைகள்.

(அ) ''தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு'' என்பது, இந்தச் சட்டத்தின்படி தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பின் செயற்பணிகளைப் புரிவதற்கு, அதிகாரமுறை அரசிதழில், அறிவிக்கை வாயிலாக மைய அரசால் அதிகாரமளிக்கப்பெற்ற நபர் அல்லது அதிகாரஅமைப்பு எதுவும் என்று பொருள்படும். [1][மற்றும் அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு அதே வரையிடத்தில் அல்லது வெவ்வேறு வரையிடங்களில் இந்தச் சட்டத்தின்படி தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பின் செயற்பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் புரிவதற்கு வெவ்வேறு நபர்களுக்கு அல்லது அதிகாரஅமைப்புகளுக்கு அதிகாரமளிக்கப்படலாம்;]

(ஆ) ''கூட்டுருமம்'' என்பது, மைய, மாகாண அல்லது மாநிலச் சட்டம் எதன்படியும் அமைக்கப்பட்ட கூட்டுருமக் குழுமம் என்று பொருள்படும், மற்றும்—

1/1956. (i) **1956** ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்பட்ட நிறுமத்தையும் ; மற்றும்

(ii) இந்தியாவில் எந்த பகுதியிலும் முன்னாளில் செல்லாற்றலிலிருந்த நிறுமங்களுக்குத் தொடர்புடைய சட்டம் எதன்படியும் அமைக்கப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்பட்ட நிறுமத்தையும் ,

உள்ளடக்கும்.

35/1952. [1][(ஆஅ) ''கனிமங்கள்'' என்பது, **1952** ஆம் ஆண்டு சுரங்கங்கள் சட்டத்தில் அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள பொருளைக் கொண்டிருக்கும் மற்றும் கனிம எண்ணெய்கள் மற்றும் திணித்து வைக்கப்படும் மணல் ஆகியவற்றை உள்ளடக்கும். ஆனால் கல்லெண்ணெயை உள்ளடக்காது; ]

30 / 1934. (இ) ''கல்லெண்ணெய்'' என்பது, **1934** ஆம் ஆண்டு கல்லெண்ணெய்ச் சட்டத்தில் உள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருக்கும் மற்றும் இயற்கை எரிவாயுவையும் சுத்திகரிக்கப்பட்ட எரிவாயுவையும் உள்ளடக்கும்;

(ஈ) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்.

---

1. சட்ட எண் **13/1977** இன் **4** ஆம் பிரிவினால் **(03–02–1977** முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

Publication of notification for acquisition.

3.(1) Whenever it appears to the Central Government that it is necessary in the public interest that for the transport of petroleum [1][or any mineral] from one locality to another locality pipelines may be laid by that Government or by any State Government or a corporation and that for the purpose of laying such pipelines it is necessary to acquire the right of user in any land under which such pipelines may be laid, it may, by notification in the Official Gazette, declare its intention to acquire the right of user therein.

(2) Every notification under sub-section (1) shall give a brief description of the land.

(3) The competent authority shall cause the substance of the notification to be published at such places and in such manner as may be prescribed.

Power to enter, survey, etc.

4. On the issue of a notification under sub-section (1) of section 3, it shall be lawful for any person authorised by the Central Government or by the State Government or the corporation which proposes to lay pipelines [1][or any mineral], and his servants and workmen.

(a) to enter upon and survey and take levels of any land specified in the notification;

(b) to dig or bore into the sub-soil;

(c) to set out the intended line of work;

(d) to mark such levels, boundaries and line by placing marks and cutting trenches;

(e) where otherwise survey cannot be completed and levels taken and the boundaries and line marked, to cut down and clear away any part of any standing crop, fence or jungle; and

---

1. Ins. by s. 5, ibid. (w.e.f. 3-2-1977).

**3.** **(1)** கல்லெண்ணெயை [1][அல்லது கனிமம் எதனையும்] ஒரு வட்டாரத்திலிருந்து இன்னொரு வட்டாரத்திற்குக் கொண்டு செல்வதற்காக மைய அரசாலோ அல்லது மாநில அரசு எதனாலுமோ அல்லது ஒரு கூட்டுருமத்தாலோ குழாய்த்தொடரைப் பதிக்கப்படலாம் என்றும் அத்தகைய குழாய்த்தொடரைப் பதிக்கும் நோக்கத்திற்காக, எந்த நிலத்தின் கீழ் அத்தகைய குழாய்த்தொடரைப் பதிக்கப்படலாகுமோ அந்த நிலம் எதிலும், பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுவது தேவையானது என்றும் பொது நலனில் தேவைப்படுகிறது என்றும் மைய அரசுக்குத் தோன்றும்போதெல்லாம், அது, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அதைப் பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுவதற்காக தம் உட்கருத்தினை விளம்புகை செய்யலாம்.

உரிமையை கையகப்படுத்து– வதற்கான அறிவிக்கையை வெளியிடுதல்.

**(2).** **(1)** ஆம் உட்பிரிவின்படியான அறிவிக்கை ஒவ்வொன்றும், அந்த நிலம் பற்றிய சுருக்கமான விவரிப்பு ஒன்றைக் கொடுத்தல் வேண்டும்.

**(3)** தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, அறிவிக்கையின் சாராம்சத்தை, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய இடத்திலும் அத்தகைய முறையிலும் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

**4.** **3** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படி அறிவிக்கையொன்று வெளியாவதன் பேரில்,–

நுழைதல், அளவாய்வு செய்தல் முதலானவற்றிற்கான அதிகாரம்.

(அ) அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட எந்த நிலத்தினுள்ளும் நுழைந்து அளவாய்வு செய்து நிலைகளை எடுப்பதும் ;

(ஆ) அடிமண்ணைத் தோண்டுவதும் அல்லது துளையிடுவதும்;

(இ) கருதப்பட்ட பணித்தொடரை அமைப்பதற்கும்;

(ஈ) குறியீடுகள் வைத்தும் அகழிகளை வெட்டியும் அத்தகைய அளவுகள், எல்லைக்கோடுகள் மற்றும் குழாய்த்தொடரைக் குறியிடுவதும்;

(உ) பிறவாறாக அளவாய்வு முடிக்கப்பட இயலாமலும் அளவுகள் எடுக்கப்படாமலும் எல்லைகளும் எல்லைக்கோடும் குறிக்கப்படாமலும் இருக்கிறவிடத்து, அறுவடையாகாத பயிர், வேலி அல்லது புதர்க்காடு எதனின் பகுதி எதனையும், வெட்டிக் குறைப்பதும், அகற்றுவதும்; மற்றும்

---

1. மேற்படிச் சட்டத்தின் 13/1977 இன்படி 5 ஆம் பிரிவினால் (03–02–1977 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

(f) to do all other acts necessary to ascertain whether pipelines can be laid under the land:

Provided that where exercising any power under this section, such person or any servant or workmen of such person shall cause as little damage or injury as possible to such land.

Hearing of Objections.

5. (1) Any person interested in the land may, within twenty-one days from the date of the notification under sub-section (1) of section 3, object to the laying of the pipelines under the land.

(2) Every objection under sub-section (1) shall be made to the competent authority in writing and shall set out the grounds thereof and the competent authority shall give the objector an opportunity of being heard either in person of by a legal practitioner and may, after hearing all such objections and after making such further inquiry, if any, as that authority thinks necessary, by order either allow or disallow the objections.

(3) Any order made by the competent authority under sub-section (2) shall be final.

---

1. Ins. by Act 13 of 1977, s. 6 (w.e.f. 3-2-1977).

(ஊ) நிலத்தின் கீழ் குழாய்த்தொடரைப் பதிக்க முடியுமா என கண்டறிவதற்குத் தேவையான பிற செயல்கள் அனைத்தையும் செய்வதும்,

கல்லெண்ணெயை [1][அல்லது கனிமம் எதனையும்] கொண்டு செல்வதற்காக குழாய்த்தொடரைப் பதிப்பதற்கான கருத்துரையை வைக்கும் மைய அரசால் அல்லது மாநில அரசால் அல்லது கூட்டுருமத்தால் அதிகாரமளிக்கப்பெற்றுள்ள நபர் எவருக்கும் மற்றும் அவருடைய பணியாளர்கள் மற்றும் வேலையாட்களுக்கும் அது சட்டமுறையானதே ஆகும்:

**வரம்புரையாக:** இந்தப் பிரிவின்படி அதிகாரம் எதனையும் செலுத்துகிறவிடத்து அத்தகைய நபர் அல்லது அத்தகைய நபரின் பணியாளர் அல்லது வேலையாள் எவரும், அத்தகைய நிலத்திற்குக் கூடுமானவரையில் சிறிதளவே இழப்போ அல்லது சேதமோ விளைவித்தல் வேண்டும்.

மறுப்புரைகளைக் கேட்டல்.

5. (1) நிலத்தில் நலப்பற்று கொண்டுள்ள நபர் எவரும், 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படியான அறிவிக்கையின் தேதியிலிருந்து இருபத்தோரு நாட்களுக்குள், நிலத்தின் கீழ் குழாய்த்தொடர்களைப் பதிப்பதற்கு மறுக்கலாம்.

(2). (1) ஆம் உட்பிரிவின் படியான மறுப்புரை ஒவ்வொன்றும், எழுத்து வடிவில், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அதன் காரணங்களை விவரித்தல் வேண்டும் மற்றும் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, மறுப்புரை செய்தவருக்கு, அவர் நேரிலோ அல்லது வழக்குரைஞர் ஒருவர் மூலமாகவோ, கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்றைக் கொடுத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய மறுப்புரைகள் அனைத்தையும் கேட்ட பின்பு மற்றும் அதிகாரஅமைப்பு தேவையெனக் கருதுகிறவாறு மேற்கொண்டு விசாரணை, ஏதேனுமிருப்பின், அத்தகைய மேலுமான விசாரணையைச் செய்த பின்பு, ஆணையின் வழி, அந்த மறுப்புரைகளை அனுமதித்தலோ அல்லது தள்ளுபடி செய்தலோ வேண்டும்.

(3). (2) ஆம் உட்பிரிவின்படி தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பினால் பிறப்பிக்கப்படும் ஆணை எதுவும், இறுதியானதாகும்.

---

1. சட்ட எண் 13/1977 இன் 6 ஆம் பிரிவினால் (03 –02–1977 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

Declaration of acquisition of right of user.

6. (1) Where no objections under sub-section (1) of section 5 have been made to the competent authority within the period specified therein or where the competent authority has disallowed the objections under sub-section (2) of that section, that authority shall, as soon as may be [1][either make a report in respect of the land described in the notification under sub-section (1) of section 3, or make different reports in respect of different parcels of such land, to the Central Government containing his recommendations on the objections, together with the record of the proceedings held by him, for the decision of that Government] and upon receipt of such report the Central Government shall, [2][if satisfied that such land is required for laying any pipeline for the transport of petroleum or any mineral,] declare, by notification in the Official Gazette, that the right of user in the land for laying the pipelines should be acquired. [2][and different declarations may be made from time to time in respect of different parcels of the land described in the notification issued under sub-section (1) of section 3, irrespective of whether one report or different reports have been made by the competent authority under this section].

(2) On the publication of the declaration under sub-section (1), the right of user [3][in the land specified therein] shall vest absolutely in the Central Government free from all encumbrances.

(3) Where in respect of any land, a notification has been issued under sub-section (1) of section 3 but [4][no declaration in respect of any parcel of land covered by that notification has been published under this section] within a period of one year from the date of that notification, that notification shall cases to have effect on the expiration of that period.

---

1.Subs. by s. 7, ibid., for “submit a report accordingly to the Central Government” (w.e.f. 3-2-1977).

2.Ins. by s. 7, ibid. (w.e.f. 3-2-1977).

3 ·Subs. by Act 13 of 1977, s. 7, for “in the land” (w.e.f. 3-2-1977).

4. Subs. by s. 7, ibid., for “no declaration under this section has been published”, (w.e.f. 3-2-1977).

பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுவதற்கு விளம்புகை செய்தல்.

**6. (1)** 5 ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படி மறுப்புரைகள் எவையும் அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலஅளவிற்குள் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பிற்குச் செய்யப்படாவிடத்து அல்லது அந்தப் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின்படி அதிகாரஅமைப்பு, மறுப்புரைகளைத் தள்ளுபடி செய்யப்படாவிடத்து, அந்த அதிகாரஅமைப்பு, கூடிய வரையில், [1][மறுப்புரைகள் மீது தம் பரிந்துரைகள் அடங்கிய தம்மால் நடத்தப்பட்ட நடவடிக்கைகளின் பதிவு ஆவணத்துடன் சேர்த்து, மைய அரசின் முடிவுக்காக, அந்த அரசுக்கு 3 ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படியான அறிவிக்கையில் வகுத்துரைக்கப்பட்ட நிலத்தைப் பொறுத்து, அறிக்கையொன்றைச் செய்தலோ அல்லது அத்தகைய நிலத்தின் வெவ்வேறு பகுதிகளைப் பொறுத்து வெவ்வேறு அறிக்கைகளைச் செய்தலோ வேண்டும்] மற்றும் அத்தகைய அறிக்கையினைப் பெறுவதன் பேரில், மைய அரசு, [2][அத்தகைய நிலம், கல்லெண்ணெய் அல்லது கனிமம் எதனையும் கொண்டு செல்வதற்காக குழாய்த்தொடர் எதனையும் பதிப்பதானது தேவைப்படுகிறது என்று மனநிறைவடையுமானால்], அதிகாரமுறை அரசிதழில், அறிவிக்கை வாயிலாக, குழாய்த் தொடர்களைப் பதிப்பதற்காக நிலத்தைப் பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுதல் வேண்டும் என்று விளம்புகை செய்தல் வேண்டும் [2][மற்றும் 3 ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படி வெளியிடப்பட்ட அறிவிக்கையில் விவரிக்கப்பட்ட நிலத்தின் வெவ்வேறு பகுதிகள் பொறுத்து, இந்தப் பிரிவின்படி தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பினால் ஓர் அறிக்கையோ அல்லது வெவ்வேறு அறிக்கைகளோ செய்யப்பட்டிருப்பதைப் பொருட்படுத்தாமல், அவ்வப்போது வெவ்வேறு விளம்புகைகள் செய்யப்படலாம்.

**(2). (1)** ஆம் உட்பிரிவின்படி விளம்புகை வெளியாவதன் பேரில், [3][அதில் குறித்துரைக்கப்பட்ட நிலத்தைப்] பயன்படுத்துபவர் உரிமையானது அனைத்து வில்லங்கமும் இல்லாமல் முழுவதுமாக மைய அரசிடம் உற்றமைந்திருத்தல் வேண்டும்.

**(3)** நிலம் எதனையும் பொறுத்து, 3 ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படி அறிவிக்கையொன்று வெளியிடப்பட்டிருந்து ஆனால் அந்த அறிவிக்கையின் தேதியிலிருந்து ஓர் ஆண்டு காலஅளவு ஒன்றுக்குள் [4][அந்த அறிவிக்கையில் அடங்கிய நிலத்தின் பகுதி எதனையும் பொறுத்த, விளம்புகை எதுவும் இந்தப் பிரிவின்படி வெளியிடப்படாதிருக்கிறவிடத்து] அந்த அறிவிக்கையானது அந்தக் காலஅளவு கழிவுறுவதன் பேரில் செல்திறம் பெறுதல் என்பது அற்றுப் போதல் வேண்டும்.

---

1. சட்ட எண் 13/1977 இன் 7 ஆம் பிரிவினால் ''மைய அரசுக்கு அதன்படி அறிக்கையொன்றை அனுப்புதல்'' என்பதற்கு மாற்றாக (03–02–1977 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

2. மேற்படிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் (03–02–1977 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

3. சட்ட எண் 13/1977 இன் 7 ஆம் பிரிவினால் ''இந்த நிலம்'' என்பதற்கு மாற்றாக (03–02–1977 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

4. மேற்படிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் ''இந்த பிரிவின்படி விளம்புகைப் வெளியிடப்படவில்லை'' என்பதற்கு மாற்றாக (03–02–1977 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

[1][(3A) No declaration in respect of any land covered by a notification issued under sub-section (1) of section 3, published after the commencement of the Petroleum Pipelines (Acquisition of Right of User in Land) Amendment Act, 1977, shall be made after the expiry of three years from the date of such publication.]

(4) Notwithstanding anything contained in sub-section (2), the Central Government may, on such terms and conditions as it may think fit to impose, direct by order in writing, that the right of user in the land for laying the pipelines shall, instead of vesting in the Central Government vest, either on the date of publication of the declaration or, on such other date as may be specified in the direction, in the State Government or the corporation proposing to lay the pipelines and thereupon the right of such user in the land shall, subject to the terms and conditions so imposed, vest in that State Government or corporation, as the case may be, free from all encumbrances.

Central Government or State Government or corporation to lay pipelines.

7. (1) Where the right of user in any land has vested in the Central Government or in any State Government or corporation under section 6 —

(i) it shall be lawful for any person authorised by the Central Government or such State Government or corporation as the case may be, and his servants and workmen to enter upon the land and lay pipelines or to do any other act necessary for the laying of pipelines:

Provided that no pipeline shall be laid under—

(a) any land which, immediately before the date of the notification under sub-section (*1*) of section 3, was used for residential purposes;

---

1. Ins. by s. 7, *ibid.* (w.e.f. 3-2-1977).

[1][(3 (அ) ) 1977 ஆம் ஆண்டு கல்லெண்ணெய் குழாய்த்தொடர் (நிலத்தைப் பயன்படுத்துபவர் உரிமையைப் பெறுதல்) சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு வெளியிடப்பட்ட, 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி வெளியிடப்பட்ட அறிவிக்கை ஒன்றில் அடங்கும் நிலம் எதனையும் பொறுத்த விளம்புகை எதுவும், அத்தகைய வெளியீட்டின் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கழிவுற்ற பின்பு செய்யப்படுதல் ஆகாது.]

(4). (2) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மைய அரசு, தாம் விதிப்பதற்குப் பொருத்தமானவையெனக் கருதும் அத்தகைய வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில் எழுத்து வடிவிலான ஆணையின் வழி, குழாய்த்தொடர்களைப் பதிப்பதற்கான இடத்தினைப் பயன்படுத்துபவர் உரிமையானது, மைய அரசிடம் உற்றமைந்திருப்பதற்குப் பதிலாக, விளம்புகை வெளியிடப்படும் தேதியன்றோ அல்லது பணிப்புரையில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற தேதியன்றோ, குழாய்த்தொடர்களைப் பதிப்பதற்குக் கருத்துரை வைக்கும் மாநில அரசிடமோ அல்லது கூட்டுருமத்திடமோ உற்றமைந்திருத்தல் வேண்டும் என்று பணிக்கலாம் மற்றும் அதன் பேரில் அத்தகைய நிலத்தைப் பயன்படுத்துபவர் உரிமையானது, அவ்வாறு விதிக்கப்பட்ட வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, அந்த மாநில அரசிடம் அல்லது நேர்வுக்கேற்ப, கூட்டுருமத்திடம், அனைத்து வில்லங்கங்களும் இல்லாமல், உற்றமைந்திருத்தல் வேண்டும்.

மைய அரசோ அல்லது மாநில அரசோ அல்லது கூட்டுருமமோ குழாய்த் தொடர்களைப் பதித்தல்.

7. (1). 6 ஆம் பிரிவின்படி நிலம் எதிலும் பயன்படுத்துபவர் உரிமையானது, மைய அரசிடமோ அல்லது மாநில அரசு எதனிடமோ அல்லது கூட்டுருமத்திடமோ உற்றமைந்திருக்கிறவிடத்து-

(i) நிலத்தில் நுழைந்து குழாய்த்தொடர்களைப் பதிப்பது அல்லது குழாய்த்தொடர்களைப் பதிப்பதற்காகத் தேவையான பிற செயல் எதனையும் செய்வது, நேர்வுக்கேற்ப, மைய அரசாலோ அல்லது அத்தகைய மாநில அரசாலோ அல்லது கூட்டுருமத்தாலோ அதிகாரமளிக்கப்பெற்றுள்ள நபர் எவருக்கும் மற்றும் அவருடைய பணியாளர்கள் மற்றும் வேலையாட்களுக்கும் அது சட்டமுறையானதாகும்:

**வரம்புரையாக:–**

(அ) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படியான அறிவிக்கையின் தேதியை ஒட்டிமுன்பு குடியிருப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலம் எதன் கீழும்;

---

1. மேற்படிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி (03–02–1977 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

(b) any land on which there stands any permanent structure which was in existence immediately before the said date;

(c ) any land which is appurtenant to a dwelling house; or

(d) any land at a depth which is less than one metre from the surface; 1 ***

[2][(ia) for laying pipelines for the transport of petroleum, it shall be lawful for any person authorised by the Central Government or such State Government or corporation to use such land for laying pipelines for transporting any mineral and where the right of user in any land has so vested for laying pipelines for transporting any mineral, it shall be lawful for such person to use such land for laying pipelines for transporting petroleum or any other mineral; and.]

(ii) such land shall be used only for laying the pipelines and for maintaining, examining, repairing, altering or removing any such pipelines or for doing any other act necessary for any of the aforesaid purposes or for the utilisation of such pipelines.

(2) If any dispute arises with regard to any matter referred to in paragraph (*b*) or paragraph (*c*) of the proviso to clause (*i*) of sub-section (*1*), the dispute shall be referred to the competent authority whose decision thereon shall be final.

---

1.The word "and" omitted by s. 8, ibid. (w.e.f. 3-2-1977).

2. Ins. by s. 8, *ibid.* (w.e.f. 3-2-1977).

(ஆ) மேற்சொன்ன தேதியை ஒட்டிமுன்பு, உளதாயிருந்த நிலையான கட்டுமானம் எதுவும், எந்த நிலத்தின் மேல் நிலைகொண்டுள்ளதோ அந்த நிலம் எதன் கீழும்;

(இ) குடியிருக்கும் வீடு ஒன்றைச் சார்ந்ததாக இருக்கும் நிலம் எதன் கீழும்; அல்லது

(ஈ) மேற்பரப்பிலிருந்து ஒரு மீட்டருக்குக் குறைவாக இருக்கும் ஆழத்தில் உள்ள நிலம் எதன் கீழும் ; [1]***

குழாய்த்தொடர் எதனையும் பதித்தல் ஆகாது.

[2][(i அ) கல்லெண்ணெயைக் கொண்டு செல்வதற்காக குழாய்த்தொடர்களைப் பதிப்பதற்காக, மைய அரசாலோ அல்லது அத்தகைய மாநில அரசாலோ அல்லது கூட்டுருமத்தாலோ அதிகாரமளிக்கப்பெற்றுள்ள நபர் எவருக்கும், அத்தகைய நிலத்தை, கனிமம் எதனையும் கொண்டு செல்வதற்காக குழாய்த்தொடர்களைப் பதிப்பதற்காகப் பயன்படுத்துவது சட்டமுறையானது ஆகும் மற்றும் அத்தகைய நிலம் எதனையும் பயன்படுத்துபவர் உரிமையானது கனிமம் எதனையும் கொண்டு செல்வதற்காக குழாய்த்தொடர்களைப் பதிப்பதற்காக அவ்வாறு உற்றமைந்திருக்கிறவிடத்து, அத்தகைய நபர், அத்தகைய நிலத்தை, கல்லெண்ணெயை அல்லது பிற கனிமம் எதனையும் கொண்டு செல்வதற்காக குழாய்த்தொடர்களைப் பதிப்பதற்காகப் பயன்படுத்துவது சட்டமுறையானது ஆகும்; மற்றும்]

(ii) அத்தகைய நிலமானது குழாய்த்தொடர்களைப் பதிப்பதற்காகவும், அத்தகைய குழாய்த்தொடர்கள் எவற்றையும் பேணிவருவதற்காக, ஆராய்வதற்காக, பழுதுபார்ப்பதற்காக, மாற்றம்செய்வதற்காக அல்லது அகற்றுவதற்காக அல்லது மேற்சொன்ன நோக்கங்களில் எதற்காகவும் தேவையான பிற செயல் எதனையும் செய்வதற்காக அல்லது அத்தகைய குழாய்த்தொடர்களைப் பயன்படுத்துவதற்காக மட்டுமே, பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின் (i) ஆம் கூறுக்கான வரம்புரையின் (ஆ) பத்தியிலோ அல்லது (இ) பத்தியிலோ சுட்டப்பட்டுள்ள பொருட்பாடு எதனையும் பொறுத்து, பூசல் எதுவும் எழுமாயின், அந்தப் பூசலானது தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பிற்குச் சுட்டியனுப்பப்படுதல் வேண்டும், அதன் மீது அவருடைய முடிபே இறுதியானதாகும்.

---

1. சட்ட எண் 13/1977 இன் 8 ஆம் பிரிவினால் ''மற்றும்'' என்ற சொல் (03–02–1977 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.
2. சட்ட எண் 13/1977 இன் 8 ஆம் பிரிவினால் (03–02–1977 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

Power to enter land for inspection, etc.

8. For maintaining, examining, repairing, altering or removing any pipelines, or for doing any other act necessary for the utilisation of the pipelines or for the making of any inspection or measurement for any of the aforesaid purposes, any person authorised in this behalf by the Central Government, the State Government or the corporation, as the case may be, may, after giving reasonable notice to the occupier of the land under which the pipelines has been laid, enter therein with such workmen and assistants as may be necessary:

Provided that, where such person is satisfied that an emergency exists no such notice shall be necessary:

Provided further that, while exercising any powers under this section, such person or any workmen or assistant of such person, shall cause as little damage or injury as possible to such land.

Restrictions regarding the use of land.

9. (1) The owner or occupier of the land with respect to which a declaration has been made under sub-section (*1*) of section 6, shall be entitled to use the land for the purpose for which such land was put to use immediately before the date of the notification under sub-section (*1*) of section 3:

Provided that, such owner or occupier shall not after the declaration under sub-section (1) of section 6—

(i) construct any building or any other structure;

(ii) construct or excavate any tank, well, reservoir or dam; or

(iii) plant any tree,

on that land.

**8.** குழாய்த்தொடர்கள் எதனையும் பேணிவருவதற்காக, ஆராய்வதற்காக, பழுதுபார்ப்பதற்காக, மாற்றம்செய்வதற்காக அல்லது அகற்றுவதற்காக அல்லது குழாய்த்தொடர்களை பயன்படுத்துவதற்காகத் தேவைப்படும் பிற செயல் எதனையும் செய்வதற்காக அல்லது மேற்சொன்ன நோக்கங்களில் எதற்காகவும் ஆய்வு அல்லது அளவீடு எதுவும் செய்வதற்காக, நேர்வுக்கேற்ப, மைய அரசால், மாநில அரசால் அல்லது கூட்டுருமத்தால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பெற்றுள்ள நபர் எவரும், எந்த நிலத்தின்கீழ் குழாய்த்தொடர்கள் பதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நிலத்தைக் கையுடைமையில் வைத்திருப்பவருக்குத் தகுமான அறிவிப்பு கொடுத்த பின்பு, தேவைப்படலாகும் அத்தகைய தொழிலாளர்களுடனும் உதவியாளர்களுடனும் அதில் நுழையலாம்: ஆய்வுசெய்தல் முதலான–வற்றிற்காக நிலத்தினுள் நுழைவதற்கான அதிகாரம்.

**வரம்புரையாக:** நெருக்கடி நிலையொன்று எழுந்துள்ளதென அத்தகைய நபர் தெளிவுறக்காண்கிறவிடத்து, அத்தகைய அறிவிப்பு எதுவும், தேவைப்படுதல் ஆகாது:

**மேலும் வரம்புரையாக:** இந்தப் பிரிவின்படி அதிகாரங்கள் எவற்றையும் செலுத்துகையில் அத்தகைய நபர் அல்லது அத்தகைய நபரின் தொழிலாளர்கள் அல்லது உதவியாளர் எவரும், அத்தகைய நிலத்திற்குக் கூடுமானவரை, குறைந்த அளவே, சேதமோ தீங்கோ விளைவித்தல் வேண்டும்.

**9. (1)** எந்த நிலத்தைப் பொறுத்து **6** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படி விளம்புகையொன்று செய்யப்பட்டிருக்கிறதோ அந்த நிலத்தின் உரிமையாளரோ அல்லது அதன் கையுடைமையாளரோ, **3** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படியான அறிவிக்கையின் தேதியை ஒட்டி முன்பு, அத்தகைய நிலம் எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக அந்த நிலத்தைப் பயன்படுத்துவதற்கு உரிமை கொண்டவர் ஆவார்: நிலத்தைப் பயன்படுத்துவது பொறுத்த கட்டுப்பாடுகள்.

**வரம்புரையாக:** அத்தகைய உரிமையாளரோ அல்லது கையுடைமையாளரோ, **6** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படியான விளம்புகைக்குப் பின்பு, அந்த நிலத்தின் மீது, –

(i) கட்டடம் எதனையும் அல்லது பிற கட்டுமானம் எதனையும் கட்டுதலோ;

(ii) நீர்த்தேக்கத்தொட்டி, கிணறு, நீர்த்தேக்கம் அல்லது அணை எதனையும் கட்டுதலோ அல்லது தோண்டுதலோ; அல்லது

(iii) மரம் எதனையும் நடுதலோ,

கூடாது.

(2) The owner or occupier of the land under which any pipelines has been laid shall not do any act or permit any act to be done which will or is likely to cause any damage in any manner whatsoever to the pipeline.

[1][(*3*) Where the owner or occupier of the land with respect to which a declaration has been made under sub-section (*1*) of section 6,-

(a) constructs any building or any other structure

(b) constructs or excavates any well

(c) plants any tree,

on that land, the Court of the District Judge within the local limits of whose jurisdiction such land is situate may, on an application made to it by the competent authority and after holding such inquiry as it may deem fit, cause the building, structure, reservoir, dam or tree to be removed or the well or tank to be filled up, and the costs of such removal or filling up shall be recoverable from such owner or occupier in the same manner as if the order for the recovery of such costs were a decree made by that Court.]

---

1. Ins. by Act 13 of 1977, s. 9 (w.e.f. 3-2-1977).

(2) எந்த நிலத்தின் கீழ் குழாய்த்தொடர்கள் பதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நிலத்தின் உரிமையாளரோ அல்லது அதன் கையுடைமையாளரோ குழாய்த்தொடர்களுக்கு எந்த முறையிலேனும் சேதம் எதுவும் விளைவிக்கும் அல்லது விளைவிக்கக் கூடியதாக இருக்கும் செயல் எதனையும் செய்தலோ அல்லது செயல் எதனையும் செய்ய அனுமதித்தலோ கூடாது.

[1][(3) எந்த நிலத்தைப் பொறுத்து, 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி விளம்புகையொன்று செய்யப்பட்டிருக்கிறதோ அந்த நிலத்தின் உரிமையாளரோ அல்லது அதன் கையுடைமையாளரோ அந்த நிலத்தின் மீது, –

(அ) கட்டடம் எதனையும் அல்லது பிற கட்டுமானம் எதனையும் கட்டுகிறவிடத்து; அல்லது

(ஆ) கிணறு, நீர்த்தேக்கத்தொட்டி, நீர்த்தேக்கம் அல்லது அணை எதனையும் கட்டுகிறவிடத்து அல்லது தோண்டுகிறவிடத்து; அல்லது

(இ) மரம் எதனையும் நடுகிறவிடத்து,

அந்த நிலம், எந்த மாவட்ட நீதிபதியின் நீதிமன்ற அதிகாரவரம்பின் வட்டார எல்லைகளுக்குள் அமைந்துள்ளதோ அந்த மாவட்ட நீதிபதியின் நீதிமன்றம், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பினால் அதற்குச் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்றின் பேரில் மற்றும் அது பொருத்தமெனக் கொள்ளும் அத்தகைய விசாரணையை நடத்தியபின்பு, அந்த நிலத்தின் மீதுள்ள கட்டடம், கட்டுமானம், நீர்த்தேக்கம், அணை அல்லது மரம் அகற்றப்படவோ அல்லது அந்தக் கிணறு அல்லது நீர்த்தேக்கத்தொட்டியை நிரப்புவதற்கான செயலைச் செய்வதற்கு அனுமதிக்கலாம் மற்றும் அத்தகைய அகற்றுதலின் அல்லது நிரப்புதலின் செலவுத்தொகை, அத்தகைய செலவுத்தொகையினை வசூலிப்பதற்கான ஆணை, அந்த நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஒரு தீர்ப்பாணையாக இருந்தாற்போன்று அதேமுறையில் அத்தகைய உரிமையாளரிடமிருந்தோ அல்லது கையுடைமையாளரிடமிருந்தோ வசூலிக்கப்படத்தக்கதாகும்.]

---

1. சட்ட எண் 13/1977 இன் 9 ஆம் பிரிவினால் (03–02–1977 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

Compensation.

10. (1) Where in the exercise of the powers conferred by section 4, section 7 or section 8 by any person, any damage, loss or injury is sustained by any person interested in the land under which the pipeline is proposed to be, or is being, or has been laid, the Central Government, the State Government or the corporation , as the case may be , shall be liable to pay compensation to such person for such damage, loss or injury , the amount of which shall be determined by the competent authority in the first instance.

(2) If the amount of compensation determined by the competent authority under sub-section (*1*) is not acceptable to either of the parties, the amount of compensation shall, on application by either of the parties to the District Judge within the limits of whose jurisdiction the land or any part thereof is situated, be determined by that District Judge.

(3) The competent authority or the District Judge while determining the compensation under sub-section (*1*) or sub-section (*2*), as the case may be, shall have due regard to the damage or loss sustained by any person interested in the land by reason of —

(i) the removal of trees of standing crops, if any, on the land while exercising the power under section 4, section 7 or section 8;

(ii) the temporary severance of the land under which the pipeline has been laid from other lands belonging to, or in the occupation of, such person; or

(iii) any injury to any other property, whether movable or immovable, or the earnings of such persons caused in any other manner:

**10. (1).** நபர் எவராலும், 4 ஆம் பிரிவு, 7 ஆம் பிரிவு அல்லது 8 ஆம் பிரிவு இவற்றால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துகையில், எந்த நிலத்தின் கீழ் குழாய்த்தொடரைப் பதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதோ, அல்லது பதிக்கப்படுகிறதோ, அல்லது பதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நிலத்தில் நலப்பற்றுடைய நபர் எவரும், சேதம், இழப்பு அல்லது தீங்கு எதுவும் அடைகிறவிடத்து, நேர்வுக்கேற்ப, மைய அரசு, மாநில அரசு அல்லது கூட்டுருமம், அத்தகைய சேதம், இழப்பு அல்லது தீங்கிற்காக அத்தகைய நபருக்கு சரியீடு வழங்குவதற்கு உள்ளாதல் வேண்டும், அந்தத் தொகையானது முதற்கண், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். சரியீடு.

**(2).** **(1)** ஆம் உட்பிரிவின்படி தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பினால் தீர்மானிக்கப்படும் சரியீட்டுத் தொகையானது தரப்பினர்களில் எவருக்கும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லையாயின், சரியீட்டுத்தொகை, அந்த நிலமோ அல்லது அதன் பகுதி எதுவும், எந்த மாவட்ட நீதிபதியின் அதிகாரவரம்பின் எல்லைகளுக்குள் அமைந்துள்ளதோ அந்த மாவட்ட நீதிபதிக்கு தரப்பினர்களில் எவரேனும் ஒருவரால் செய்யப்படும் விண்ணப்பத்தின் பேரில், அந்த மாவட்ட நீதிபதியால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**(3)** தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு அல்லது மாவட்ட நீதிபதி, **(1)** ஆம் உட்பிரிவின்படியோ அல்லது நேர்வுக்கேற்ப, **(2)** ஆம் உட்பிரிவின்படியோ சரியீட்டைத் தீர்மானிக்கையில்,—

(i) 4 ஆம் பிரிவு, 7 ஆம் பிரிவு அல்லது 8 ஆம் பிரிவு இவற்றின்படி அதிகாரங்களைச் செலுத்துகையில் அந்த நிலத்தின் மீது, மரங்களை அல்லது அறுவடையாகாதப் பயிர்களை அகற்றும் காரணமாகவோ;

(ii) குழாய்த்தொடர் பதிக்கப்பட்டிருக்கும் நிலத்தை அத்தகைய நபருக்குச் சொந்தமான, அல்லது அவருடைய கையுடைமையில் உள்ள பிற நிலங்களிலிருந்து தற்காலிகமாகத் துண்டிப்பதன் காரணமாகவோ; அல்லது

(iii) பிற எந்த முறையிலும் அத்தகைய நபர்களின் பிற அசையும் அல்லது அசையாச் சொத்து எதற்கும், அல்லது ஈட்டிய பொருள்களுக்கு ஏற்பட்ட தீங்கு எதன் காரணமாகவோ,

நிலத்தில் நலப்பற்று கொண்டுள்ள நபர் எவராலும் அடையப்பெற்ற சேதம் அல்லது இழப்பை உரியவாறு கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்:

Provided that in determining the compensation no account shall be taken of any structure or other improvement made in the land after the date of the notification under sub-section (*1*) of section 3.

(4) Where the right of user of any land has vested in the Central Government, the State Government or the corporation, the Central Government, the State Government or the corporation, as the case may be, shall, in addition to the compensation, if any, payable under sub-section (1), be liable to pay to the owner and to any other person whose right of enjoyment in that land has been affected in any manner whatsoever by reason of such vesting, compensation calculated at ten per cent. of the market value of that land on the date of the notification under sub-section (1) of section 3.

(5) The market value of the land on the said date shall be determined by the competent authority and if the value so determined by that authority is not acceptable to either of the parties, it shall, on application by either of the parties to the District Judge referred to in sub - section (2), be determined by that District Judge.

(6). The decision of the District Judge under sub-section (*2*) or sub-section (*5*) shall be final.

Deposit and payment of compensation

11. (1) The amount of compensation determined under section 10 shall be deposited by the Central Government, the State Government or the corporation, as the case may be, with the competent authority within such time and in such manner as may be prescribed.

(2) If the amount of compensation is not deposited within the time prescribed under sub-section (1), the Central Government, the State Government or the corporation, as the case may be, shall be liable to pay interest thereon at the rate of six per cent. per annum from the date on which the compensation had to be deposited till the date of the actual deposit.

(3) As soon as may be after the compensation has been deposited under sub-section (1) the competent authority shall, on behalf of the Central Government the State Government or the corporation, as the case may be, pay the compensation to the person entitled thereto.

**வரம்புரையாக:** சரியீட்டைத் தீர்மானிக்கையில், **3** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படியான அறிவிக்கையின் தேதிக்குப் பின்பு, நிலத்தில் செய்யப்பட்ட கட்டுமானம் அல்லது பிற மேம்பாடு எதுவும், கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதல் ஆகாது.

(4) நிலம் எதனின் பயன்படுத்துபவர் உரிமை மைய அரசிடமோ, மாநில அரசிடமோ அல்லது கூட்டுருமத்திடமோ உற்றமைந்திருக்கிறவிடத்து, நேர்வுக்கேற்ப, மைய அரசு, மாநில அரசு அல்லது கூட்டுருமம், (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கத்தக்க சரியீடு, ஏதேனுமிருப்பின், அதனுடன் சேர்த்து, உரிமையாளருக்கும் அத்தகையவாறு உற்றமைந்திருத்தலின் காரணமாக அந்த நிலத்தில் எவருடைய துய்ப்பு உரிமை எந்த முறையிலேனும் பாதிக்கப்பட்டிருக்குமோ அந்தப் பிற நபர் எவருக்கும், **3** ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படியான அறிவிக்கையின் தேதியன்று அந்த நிலத்தின் சந்தை மதிப்பில் பத்து சதவீதம் கணக்கிட்டு சரியீடு வழங்குவதற்கு உள்ளாதல் வேண்டும்.

(5) மேற்சொன்ன தேதியன்று நிலத்தின் சந்தை மதிப்பானது, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அந்த அதிகாரஅமைப்பினால் அவ்வாறு தீர்மானிக்கப்படும் மதிப்பு தரப்பினர்களில் எவருக்கும் ஏற்புடையதாக இல்லையாயின், அது தரப்பினர்களில் எவராலும், (2) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள மாவட்ட நீதிபதிக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின் பேரில், அந்த மாவட்ட நீதிபதியால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(6). (2) ஆம் உட்பிரிவின்படியோ அல்லது (5) ஆம் உட்பிரிவின்படியோ மாவட்ட நீதிபதியின் முடிபே, இறுதியானது ஆகும்.

சரியீட்டை வைப்பீடு செய்தலும் வழங்குதலும்.

11. (1) 10 ஆம் பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட சரியீட்டுத் தொகையானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள்ளும், அத்தகைய முறையிலும், நேர்வுக்கேற்ப, மைய அரசாலோ, மாநில அரசாலோ அல்லது கூட்டுருமத்தாலோ, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பிடம் வைப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்டுள்ள காலத்திற்குள் சரியீடுத் தொகையை வைப்பீடு செய்யப்படவில்லையாயின், எந்தத் தேதியன்று சரியீடு வைப்பீடு செய்யப்படவேண்டுமோ அந்தத் தேதியிலிருந்து உள்ளபடியாக வைப்பீடு செய்திருக்கும் தேதிவரையில் ஆண்டுக்கு ஆறு சதவீதம் என்ற வீதத்தில் அதன் மீது வட்டி வழங்குவதற்கு, நேர்வுக்கேற்ப, மைய அரசு, மாநில அரசு அல்லது கூட்டுருமம் உள்ளாதல் வேண்டும்.

(3) . (1) ஆம் உட்பிரிவின்படி சரியீட்டை வைப்பீடு செய்த பின்பு, கூடிய விரைவில், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, நேர்வுக்கேற்ப, மைய அரசு, மாநில அரசு அல்லது கூட்டுருமம் சார்பாக சரியீட்டினை, அதற்கு உரிமைகொண்டுள்ள நபர்களுக்கு வழங்க வேண்டும்.

(4) Where several persons claim to be interested in the amount of compensation deposited under sub-section (1), the competent authority shall determined the persons who in its opinion are entitled to receive the compensation and the amount payable to each of them.

(5) If any dispute arises as to the apportionment of the compensation or any part thereof or as to the persons to whom the same or any part thereon is payable, the competent authority shall refer the dispute to the decision of the District Judge within the limits of whose jurisdiction the land or any part thereof is situated and the decision of the District Judge thereon shall be final.

Competent authority to have certain powers of civil courts.

12. The competent authority shall have, for the purposes of this Act, all the powers of a civil court while trying a suit under the Code of Civil Procedure, 1908 in respect of the following matters, namely:— 5 of 1908.

(a) summoning and enforcing the attendance of any person and examining him on oath;

(b) requiring the discovery and production of any document;

(c) reception of evidence on affidavits;

(d) requisitioning any public record from any court or office;

(e) issuing commission for examination of witnesses.

Protection of action taken in good faith.

13. (1) No suit, prosecution or other legal proceeding shall lie against any person for anything which is in good faith done or intended to be done in pursuance of this Act or any rule or notification made or issued thereunder.

(4) . (1) ஆம் உட்பிரிவின்படி வைப்பீடு செய்யப்பட்ட சரியீட்டுத் தொகையில் நலப்பற்று கொண்டவரென பல்வேறு நபர்கள் கோருகிறவிடத்து, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, சரியீட்டை பெறுவதற்கு உரிமை கொண்டுள்ளவர் என தாம் கருதும் நபர்களையும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கத்தக்க தொகையையும் தீர்மானித்தல் வேண்டும்.

(5) சரியீட்டையோ அல்லது அதன் பகுதி எதனையுமோ பிரித்துக் கொடுத்தல் பற்றியோ, அல்லது எந்த நபர்களுக்கு அதுவோ அல்லது அதன் பகுதி எதுவுமோ வழங்கப்பட வேண்டும் என்பது பற்றியோ பூசல் எதுவும் எழுமாயின், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, அந்தப் பூசலை, அந்த நிலம் அல்லது அதன் பகுதி எதுவும், எந்த மாவட்ட நீதிபதியின் அதிகாரவரம்பின் எல்லைகளுக்குள் அமைந்திருக்கிறதோ அந்த மாவட்ட நீதிபதியின் முடிபுக்குச் சுட்டியனுப்புதல் வேண்டும் மற்றும் அதன் மீது அந்த மாவட்ட நீதிபதியின் முடிபே இறுதியானது ஆகும்.

தகுதிறமுள்ள அதிகார அமைப்பு, உரிமையியல் நீதிமன்றங்களின் குறித்தசில அதிகாரங்களைக் கொண்டிருத்தல்.

5 / 1908. **12.** இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்தின்படி உரிமைவழக்கு ஒன்றை விசாரணை செய்யுங்கால், பின்வரும் பொருட்பாடுகளைப் பொறுத்து, உரிமையியல் நீதிமன்றம் ஒன்றின் அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டிருத்தல் வேண்டும், அவையாவன:—

(அ) நபர் எவருக்கும் அழைப்பாணை விடுத்து அவர் முன்னிலையாவதைக் கட்டாயப்படுத்துதல் மற்றும் ஆணைமொழியின் பேரில் அவரை விசாரணை செய்தல்;

(ஆ) ஆவணம் எதனையும் வெளிக்கொணர்ந்து முன்னிடும்படி வேண்டுறுத்துதல்;

(இ) ஆணை உறுதிமொழி ஆவணங்களின் பேரில் சான்றினை ஏற்றல்;

(ஈ) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலுமிருந்தும் பொதுப் பதிவு ஆவணம் எதனையும் வேண்டிப் பெறுதல்;

(உ) சாட்சிகளை விசாரணை செய்வதற்காக ஆணை பிறப்பித்தல்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**13.** (1) இந்தச் சட்டம் அல்லது அதன்படி செய்யப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட விதி அல்லது அறிவிக்கை எதனையும் பின்பற்றி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் அவ்வாறு செய்த நபர் எவருக்கும் எதிராக, உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் எடுப்பதென்பது உற்றது ஆகாது.

(2) No suit or other legal proceeding shall lie against the Central Government, the competent authority or any State Government, or corporation for any damage, loss or injury caused or likely to be caused by anything which is in good faith done or intended to be done in pursuance of this Act or any rule or notification made or issued there under.

Bar of jurisdiction of civil courts.

14. Save as otherwise expressly provided in this Act, no civil court shall have jurisdiction in respect of any matter which the competent authority is empowered by or under this Act to determine and no injunction shall be granted by any court or other authority in respect of any action taken or proposed to be taken in pursuance of any power conferred by or under this Act.

Penalty.

[1][15. (1) Whoever wilfully obstructs any person in doing any of the acts authorised by section 4 or section 7 or section 8 or wilfully fills up, destroys, damages or displaces any trench or mark made under section 4 or wilfully does any act prohibited under section 9, shall be punishable with imprisonment for a term which may extend to six months or with fine or with both.

(2) Whoever wilfully makes or causes to make any unauthorised connection with or removes, destroys, damages or displaces any pipeline laid under section 7, or wilfully inserts any device to extract petroleum product or minerals from such pipeline, or wilfully disrupts supplies being made through the pipeline, shall be punishable with rigorous imprisonment for a term which may extend to ten years and shall also be liable to fine.

---

1. Subs. by Act 9 of 2012, s. 2, for sections 15 and 16 (w.e.f. 3-2-1977).

(2) இந்தச் சட்டம் அல்லது அதன்படி செய்யப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட விதி அல்லது அறிவிக்கை எதனையும் பின்பற்றி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனாலும் விளைவிக்கப்பட்ட அல்லது விளைவிக்கப்படக் கூடிய சேதம், இழப்பு அல்லது தீங்கு எதற்காகவும் மைய அரசு, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு அல்லது மாநில அரசு, அல்லது கூட்டுருமம் எதற்கும் எதிராக, உரிமை வழக்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கையோ தொடுப்பதென்பது உற்றது ஆகாது.

உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்குத் தடை.

**14.** இந்தச் சட்டத்தில் பிறவாறாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டவாறு அன்றி, இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, தீர்மானிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள பொருட்பாடு எதனையும் பொறுத்து, உரிமையியல் நீதிமன்றம் எதுவும், அதிகாரவரம்பு கொண்டிருத்தல் ஆகாது மற்றும் இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் எதனையும் பின்பற்றி எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக் கருதப்பட்ட நடவடிக்கை எதனையும் பொறுத்து, நீதிமன்றம் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதனாலும் உறுத்துக்கட்டளை எதுவும், வழங்கப்படுதல் ஆகாது.

தண்டம்.

[1][**15. (1)** 4 ஆம் பிரிவு அல்லது 7 ஆம் பிரிவு அல்லது 8 ஆம் பிரிவால் அதிகாரமளிக்கப்பட்ட செயல்களில் எதனையும் செய்கையில் நபர் எவரையும் வேண்டுமென்றே தடுக்கிற அல்லது 4 ஆம் பிரிவின்படி செய்யப்பட்ட அகழி அல்லது குறியீடு எதனையும் வேண்டுமென்றே நிரப்புகிற, அழிக்கிற, சேதப்படுத்துகிற அல்லது இடம்பெயர்த்து வைக்கிற அல்லது 9 ஆம் பிரிவின்படி தடைசெய்யப்பட்ட செயல் எதனையும் வேண்டுமென்றே செய்கிறவர் எவராயினும், ஆறு மாதங்கள் வரை நீடிக்கும் காலம் ஒன்றுக்கு சிறைத்தண்டனை விதித்து அல்லது அபராதம் விதித்து அல்லது அவை இரண்டும் விதித்து தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

(2). 7 ஆம் பிரிவின்படி பதிக்கப்பட்ட குழாய்த்தொடர் எதனையும் வேண்டுமென்றே அனுமதியற்ற தொடர் எதனையும் செய்கிற அல்லது செய்யும்படிச் செய்விக்கிற அல்லது அதனை அகற்றுகிற, அழிக்கிற, சேதப்படுத்துகிற அல்லது இடம் பெயர்த்து வைக்கிற, அல்லது அத்தகைய குழாய்த்தொடரிலிருந்து கல்லெண்ணெய் உற்பத்திப் பொருள் அல்லது கனிமங்களை எடுக்கும் பொருட்டு வேண்டுமென்றே கருவி எதனையும் செருகுகிற, அல்லது குழாய்த்தொடர் ஊடாக வழங்கல்கள் செய்யப்படுவதை வேண்டுமென்றே துண்டிக்கிறவர் எவராயினும், பத்து ஆண்டுகள் வரை நீடிக்கும் காலம் ஒன்றுக்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார், அத்துடன் அபராதத்திற்கும் கூட உள்ளாதல் வேண்டும்.

1. சட்ட எண் 9/2012 இன் 2 ஆம் பிரிவினால் 15 ஆம் பிரிவு மற்றும் 16 ஆம் பிரிவிற்கு மாற்றாக (03–02–1977 முதல் செல்திறம் பொறுமாறு) அமைக்கப்பட்டது.

(3) If any person convicted of an offence under sub-section (*2*) is again convicted of an offence under the same provision, he shall be punishable with rigorous imprisonment for the second and for every subsequent offence for a term which shall not be less than three years but which may extend to ten years:

Provided that the court may, for any adequate and special reasons to be mentioned in the judgment, impose a sentence of imprisonment for a term of less than three years.

(4) Whoever, with the intent to cause or knowing that he is likely to cause damage to or destruction of any pipeline laid under section 7, causes by fire, explosive substance or otherwise damage to the pipeline being used for transportation of petroleum products, crude oil or gas with the intent to commit sabotage or with the knowledge that such act is so imminently dangerous that it may in all probability cause death of any person or such bodily injury likely to cause death of any person, shall be punishable with rigorous imprisonment which shall not be less than ten years but may extend to imprisonment for life or death.

Certain offences to be cognizable.

16. Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1973 (an offence falling under sub-sections (*2*), (*3*) and (*4*) of section 15 shall be deemed to be cognizable and non-bailable within the meaning of that Code. 2 of 1974.

(3). (2) ஆம் உட்பிரிவின்படியான குற்றச்செயல் ஒன்றுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட நபர் எவரும், அதே சட்டப்பிரிவினை மீண்டும் மீறிய குற்றச்செயல் ஒன்றுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவாராயின், அவர் இரண்டாவதற்கும் மற்றும் பிந்திய குற்றச்செயல் ஒவ்வொன்றுக்கும் மூன்று ஆண்டுகளுக்குக் குறைவாக இருக்கலாகாத ஆனால் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கும் காலம் ஒன்றுக்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்:

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் சொல்லப்பட வேண்டிய போதுமான மற்றும் சிறப்புக் காரணங்களுக்காக, மூன்று ஆண்டுகளுக்குக் குறைவான காலம் ஒன்றுக்குச் சிறைத்தண்டனை விதிக்கலாம்.

(4). 7 ஆம் பிரிவின்படி பதிக்கப்பட்ட குழாய்த்தொடர்கள் எதற்கும் சேதம் விளைவிக்கும் அல்லது அதனை அழிக்கும் எண்ணத்துடன் அல்லது அவர் சேதம் விளைவிக்கக் கூடும் அல்லது அழிக்கக்கூடும் என்று அறிந்தே, கல்லெண்ணெய் உற்பத்திப் பொருள்கள், சுத்திகரிக்கப்படாத எண்ணெய் அல்லது எரிவாயு இவற்றைக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்படும் குழாய்த்தொடருக்கு, நாசவேலை இழைக்கும் எண்ணத்துடனோ அல்லது அத்தகைய செயலானது அனைத்து நிகழ்விலும் எந்த நபருக்கும் மரணத்தையோ அல்லது எந்த நபருக்கும் மரணத்தை ஏற்படுத்தக்கூடிய உடற்காயத்தையோ விளைவிக்கும் அளவிற்கு ஆபத்தானது என்று அறிந்தே தீ, வெடிபொருள் மூலமாகவோ பிறவாறாகவோ சேதம் விளைவிப்பவர் எவராயினும், பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக இருக்கலாகாத கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து ஆனால் ஆயுட்கால சிறைத்தண்டனை வரை நீடிக்கும் அல்லது மரணதண்டனை வரை நீடிக்கும் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

2 / 1974.

குறித்தசில குற்றச்செயல், பிடியாணையின்றி கைது செய்வதற் குரியதாக இருத்தல்.

**16.** **1973** ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 15 ஆம் பிரிவின் (2), (3) மற்றும் (4) ஆகிய உட்பிரிவுகளின் கீழ் வரும் குற்றச்செயல் ஒன்று அந்தத் தொகுப்புச்சட்டத்தின் பொருளின்படி பிடியாணையின்றி கைது செய்வதற்குரியதாக மற்றும் பிணையத்தில் விடத்தகாத குற்றச்செயலாகக் கொள்ளப்படும்.

Burden of proof in certain cases.

16A. Where any petroleum product together with any tool, vehicle or any item used in committing any such offence under sub-section (*2*) or sub-section (*4*) of section 15 are seized under this Act in the reasonable belief that such petroleum product has been stolen from the pipeline laid under section 7, the burden of proving that they are not stolen property shall be, in case where such seizure is made from the possession of any person,—

(i) on the person from whose possession the property was seized, and

(ii) on the person who claims to be the owner thereof, if any person other than the person from whose possession the stolen property was seized.

Presumption regarding property.

16B. When any proceeding taken under this Act, or in consequence of anything done under this Act, a question arises as to whether any petroleum product is the property of the corporation, the Court shall presume, unless the contrary is shown, that such petroleum product belongs to the corporation.

Provisions as to bail.

16C. (1) Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1973 no person accused of an offence punishable under sub-section (4) of section 15 shall, if in custody, be released on bail or on his own bond unless— 2 of 1974.

(a) the Public Prosecutor has been given an opportunity to oppose the application for such release; and

16 (அ). கல்லெண்ணெய் உற்பத்திப் பொருள் எதுவும், 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படியோ அல்லது (4) ஆம் உட்பிரிவின்படியோவான அத்தகைய குற்றச்செயல் எதனையும் இழைப்பதில் பயன்படுத்தப்பட்ட கருவி, ஊர்தி அல்லது உருப்படி எதனுடனும் சேர்த்து அத்தகைய கல்லெண்ணெய் உற்பத்திப் பொருளானது, 7 ஆம் பிரிவின்படி புதைக்கப்பட்ட எண்ணெய்க் குழாய்த்தொடரிலிருந்து திருடப்பட்டிருக்கிறது என்ற தகுமான நம்பிக்கையில் இந்தச் சட்டத்தின்படி கைப்பற்றப்படுகிறவிடத்து, அத்தகைய கைப்பற்றுகையானது, எந்த ஒரு நபரின் கைவசமிருந்தும் செய்யப்படும் நேர்வில், அவை திருடப்பட்ட சொத்து அல்ல என்று மெய்ப்பிக்கும் சுமையானது, குறித்தசில நேர்வுகளில் மெய்ப்பிக்கும் சுமை.

(i) அத்தகைய சொத்தின் கைப்பற்றுகை எந்த நபரின் கைவசமிருந்து செய்யப்பட்டதோ அந்த நபருடையதாகும், மற்றும்

(ii) எந்த நபரின் கைவசமிருந்து அந்தத் திருடப்பட்ட சொத்து கைப்பற்றப்பட்டதோ அந்த நபர் அல்லாத பிற நபர் எவராகயிருந்தாலும், அதன் உரிமையாளர் என கோரும் நபருடையதாகும்.

16 (ஆ). இந்தச் சட்டத்தின்படியோ, அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனின் விளைவாகவோ எடுக்கப்பட்ட நடவடிக்கை எதிலும், கல்லெண்ணெய் உற்பத்திப்பொருள் எதுவும் கூட்டுருமத்தின் சொத்தாக இருக்கிறதா என்பது பற்றி பிரச்சினை ஒன்று எழும்போது, நீதிமன்றம் முரணானது காட்டப்பட்டாலன்றி, அத்தகைய உற்பத்திப்பொருள் கூட்டுருமத்திற்குச் சொந்தமானது என அனுமானம் கொள்ளுதல் வேண்டும். சொத்து குறித்த அனுமானம்.

2/1974. 16 (இ). (1) 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 15 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி தண்டிக்கத்தக்க குற்றச்செயல் ஒன்றுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் எவரும், சிறைக்காப்பில் இருப்பாராயின், அவரைப் பிணையத்தின் பேரிலோ அல்லது தம் சொந்தப் பிணையத்தின் பேரிலோ விடுவிப்பதற்கு — பிணையம் பற்றிய வகையங்கள்.

(அ) அத்தகைய விடுவிப்பிற்கான விண்ணப்பத்தை எதிர்ப்பதற்கு, அரசு குற்றவியல் வழக்குரைஞருக்கு வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி; மற்றும்

(b) where the Public Prosecutor opposes the application, the court is satisfied that there are reasonable grounds for believing that he is not guilty of such offence and that he is not likely to commit any offence while on bail.

(2) The limitations on granting of bail specified in sub-section (*1*) are in addition to the limitations under the Code of Criminal Procedure, 1973 or any other law for the time being in force on granting of bail. 2/1974.

(3) Nothing contained in this section shall be deemed to affect the special powers of the High Court regarding bail under section 439 of the Code of Criminal Procedure, 1973 2/1974.

Section 438 of the Code of Criminal Procedure, 1973 not to apply.

16D. Nothing in section 438 of the Code of Criminal Procedure, 1973 shall apply in relation to any case involving the arrest of any person on an accusation of having committed an offence punishable under sub-section (*4*) of section 15.] 2 /1974.

Power to make rules.

17. (1) The Central Government may, by notification in the Official Gazette, make rules for carrying out the [1][provisions] of this Act.

(2) In particulars and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely:—

(a) the places at which and the manner in which the substance of the notification may be published under sub -section (*3*) of section 3;

---

1. Subs. by Act 13 of 1977, s. 10, for "purposes" (w.e.f. 3-2-1977).

(ஆ) அரசுக் குற்றவியல் வழக்குரைஞர், அந்த விண்ணப்பத்தை எதிர்க்கிறவிடத்து, அத்தகைய குற்றச்செயலைச் செய்த நபர் குற்றஞ்செய்தவர் அல்ல என்றும் மற்றும் அவர் பிணையத்தில் இருக்கையில் குற்றச்செயல் எதனையும் இழைக்கக் கூடியவராக இல்லை என்றும் நம்புவதற்குத் தகுமான காரணங்கள் இருக்கின்றன என்று நீதிமன்றம் மனநிறைவடைந்தாலன்றி,

பிணையத்தின் பேரிலோ அல்லது தம் சொந்தப் பிணையத்திலோ விடுவிக்கப்படுதல் ஆகாது.

2/1974. (2). (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள பிணையம் வழங்குவதன் மீதான வரம்புகள், பிணையம் வழங்குவதன் மீது 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்தின்படியோ அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள பிற சட்டம் எதன்படியுமோவான வரம்பிற்குக் கூடுதலாக இருப்பனவாகும்.

2/1974. (3) இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எதுவும், 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்தின் 439 ஆம் பிரிவின்படி பிணையம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தனி அதிகாரங்களைப் பாதிப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 438 ஆம் பிரிவு பொருந்தாது.

2/1974. 16 (ஈ). 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 438 ஆம் பிரிவில் உள்ள எதுவும், 15 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி தண்டிக்கத்தக்க குற்றச்செயல் ஒன்றில் ஈடுபட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுக்கு உள்ளாகக்கூடிய நபரின் வழக்கு தொடர்பாக பொருந்துதல் ஆகாது.]

விதிகளை செய்வதற்கான அதிகாரம்.

17. (1) மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில், அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் [1][வகையங்களை] நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும் அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம், அவையாவன;—

(அ) 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி எந்த இடங்களிலும் மற்றும் எந்த முறையிலும் அறிவிக்கையின் சாராம்சம் வெளியிடப்படலாமோ அந்த இடங்கள் மற்றும் அந்த முறை;

---

1. சட்ட எண் 13/1977 இன் 10 ஆம் பிரிவினால் ''நோக்கங்கள்'' என்பதற்கு மாற்றாக (03—02—1977 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(b) the time within which and the manner in which the amount of compensation may be deposited under sub-section (*1*) of section 11.

(3) Every rule made under this Act shall be laid as soon as may be after it is made before each Houses of Parliament while it is in session for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if [1][before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid], both Houses agree in making any modification in the rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so however that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule .

Application of other laws not barred.

18. The provisions of this Act shall be in addition to and not in derogation of any other law for the time being in force relating to acquisition of land.

1. Subs. by Act 13 of 1977, s. 10, for "before the expiry of the session in which it is so laid or the successive sessions aforesaid" (w.e.f. 3-2-1977).

(ஆ) 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி எந்த நேரத்திலுக்குள்ளும் மற்றும் எந்த முறையிலும் சரியீட்டுத் தொகை வைப்பீடு செய்யப்படலாமோ அந்த நேரம் மற்றும் அந்த முறை;

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்றத்தின் அவை ஒவ்வொன்றிலும் அது ஒரு கூட்டத்தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ, மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு காலஅளவிற்கு அது அமர்வில் இருக்கையில், அதன் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் [1][மேற்கூறப்பட்ட கூட்டத்தொடரினை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு,] அந்த விதியில் மாற்றமைவு எதுவும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி செய்யப்படுதலாகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும்; அல்லது நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும், எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

**18.** இந்தச் சட்டத்தின் வகையங்கள், நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி அதனைக் குந்தகப்படுத்தும் வகையில் இருத்தல் ஆகாது.

பிற சட்டங்களின் பொருந்துகை தடை செய்யப் படவில்லை.

1. சட்ட எண் 13/1977 இன் 10 ஆம் பிரிவின்படி "கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அதில் அவ்வாறு வைக்கப்பட்ட அல்லது மேற்சொன்ன அடுத்தடுத்து தொடர்ந்து வருகிற கூட்டத்தொடர்கள்'' என்பதற்கு மாற்றாக (03-02-1977 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.